யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை- 2015
## Term Examination, July - 2015


| தரம் :- 12 (2016) | பொருளியல் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**கவனிக்க.**

- **பகுதி - I எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பகுதி - II இல் "அ", "ஆ" பகுதிகளிலிருந்து தலா இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**
- **பகுதி - I இல் 01 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடி (✕) இடுவதன் மூலம் காட்டுக.**

### பகுதி - I


01) பின்வரும் உற்பத்திச் சாத்திய விளையியில் உள்ள புள்ளி நகர்வு எதனை விளக்குகின்றது?




(1) தொழில்நுட்ப வீழ்ச்சி
(2) பாதுகாப்புப் பொருளின் வாய்ப்புக் கிரயத்தில் ஏற்படும் வீழ்ச்சி
(3) வளப் பகுதியொன்று பயன்படுத்தப்படாத நிலை
(4) ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட வளம் பயன்படுத்தப்படாமை
(5) பாதுகாப்புப் பொருளில் குறைந்த விருப்பம்

02) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) சூழல் பாதுகாப்பிற்கென வளர்க்கப்படும் மரங்கள் ஆக்கக் காரணி நிலத்திற்குள் அடங்கும்.
(2) சர்வதேச பரிவர்த்தனையால் விளையிக்கு வெளியே காணப்படும் பொருளை ஆக்க இயலும்.
(3) நடைமுறையில் அமையச்செலவு அதிகரித்துச் செல்வதற்கு வளங்கள் பூரண பதிலீட்டைக் கொண்டிருக்காமையும் காரணம் ஆகும்.
(4) விலை செலுத்துதல் வேண்டும் எனும் நிபந்தனை பொதுவளங்களைப் பொறுத்த வரை காணப்படாமையினால் பொது வளங்கள் நுகர்வில் போட்டித் தன்மையற்றவையாகும்.
(5) "பொருளியலிற்கு முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் அனைத்தும் பொருளியலை முழுமையாகவும் சிறப்பாகவும் வரைவிலக்கணப்படுத்துகின்றன" என்பது பொய்யாகாது.

03) தொழில்நுட்ப விருத்தியின் முன் OE எனும் பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு யாது?




(1) BD
(2) CD
(3) CA
(4) DO
(5) OB

04) ஒருவன் 4 மீன்களை இரண்டு மணித்தியாலத்தில் பிடிக்கலாம். அல்லது 10 அப்பிள்களை அரை மணித்தியாலத்தில் பறிக்கலாம். அல்லது வீட்டில் ஓய்வாக இருந்திருக்கலாம் எனின் பொருளாதாரத்தில் மீன் பிடிப்பதற்கான அமையச் செலவு யாது?

(1) ஓய்வெடுக்கும் நேரம்
(2) 10 அப்பிள்கள்
(3) 40 அப்பிள்கள்
(4) அமையச் செலவு பூச்சியம்
(5) 2.5 அப்பிள்கள்

05) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியின் படி நிலையான காரணிகளுடன் மாறும் காரணியைக் கூடுதலாகச் சேர்க்கும் போது யாது நிகழும்?

(1) வெளியீட்டில் சம அளவு அதிகரிப்பை ஏற்படுத்த சிறிய அலகு மாறும் காரணி தேவைப்படும்
(2) மாறும் காரணியின் அளவின் குறைவு படிப்படியாக செலவில் அதிகரிப்பை உண்டாக்கும்
(3) மாறும் காரணிகளின் விலை அதிகரிப்பு படிப்படியாக செலவில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
(4) காரணிகளின் இணைப்பு விகிதம் முடிவில் வெளியீட்டில் சிறிய அதிகரிப்பைக் காட்டும்
(5) மேற்கூறிய அனைத்தும்

06) குறித்த வளமொன்று தொடர்பாக கைவிடப்பட்ட மாற்றுபயோகங்கள் தொடர்பான செலவு வகை எது?

(1) ஆழ்ந்த கிரயம்
(2) எல்லைக் கிரயம்
(3) மொத்தக் கிரயம்
(4) சந்தர்ப்பக் கிரயம்
(5) மேற்கூறிய எதுவுமில்லை

07) நாட்டின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனையான “எவ்வாறு உற்பத்தி செய்தல்” என்பதனால் தெளிவுபடுத்தப்படுவது யாது?

(1) உற்பத்தியாளர்களின் ஊழியத் தெளிவு எது என்பது
(2) உற்பத்தியின் நோக்கம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல் என்பது
(3) உற்பத்திப் பொருள் மீண்டெழும் நுகர்விற்கா அல்லது மீண்டெழா நுகர்விற்கா என்பது
(4) உற்பத்தி வெளியீடு நாட்டில் எத்தொழில்நுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது
(5) உற்பத்திப் பொருள் எவ்வகை முகாமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்பது

08) அரிசியின் விலை மற்றும் விற்பனைத் தொகை இரண்டும் அதிகரிக்கின்றது. இதற்குக் காரணமாகக் கூடியது
(1) நுகர்வோன் வருமானம் வீழ்ச்சியடைதல்
(2) அரிசியின் மீதான வரி வீழ்ச்சியடைதல்
(3) அரிசி உற்பத்தி நிறுவனத்தின் தொழிலாளர்களின் கூலி அதிகரித்தல்
(4) அரிசியின் பிரதியீட்டுப் பொருட்களின் விலை அதிகரித்தல்
(5) அரிசியின் பிரதியீட்டுப் பொருட்களின் விலை குறைதல்

09) கேள்வி வளைகோடொன்றில் $x$ பொருளின் விலை 2 ரூபாவாகக் குறைவடைகின்றது எனின் புறக்காரணித்தாக்கம் இல்லாத போது நிகழக்கூடியது
(1) $x$ பொருளின் கேள்வி குறைவடையும்
(2) $x$ பொருளின் கேள்வி அதிகரிக்கும்
(3) $y$ பொருளின் கேள்விக் கணியம் அதிகரிக்கும்
(4) $x$ பொருளின் கேள்வி அளவு அதிகரிக்கும்
(5) கேள்வி மாற்றம் நெகிழ்ச்சியில் தங்கியிருக்கும்

10) கிபன் பொருளொன்றின் மிகப் பிரதானமான இயல்பு யாது?
(1) வருமானத்திற்கும், பொருளின் கேள்விக்குமிடையே நேர்க்கணியத் தொடர்பு காணப்படும்
(2) தரம் குறைந்த பொருளாகக் காணப்படுதல்
(3) விலை மாற்றம், கேள்வித் தொகை மாற்றத்தினை ஏற்படுத்துவதில்லை
(4) விலைக்கும், கேள்வித் தொகைக்கும் இடையே நேர்க்கணியத் தொடர்பானது காணப்படுதல்
(5) மலிவான பொருளாகக் காணப்படுதல்

11) ஒரு பொருளின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருக்குமாயின், மொத்த வருமானம்
(1) விலை உயர்ந்தால் அதிகரிக்கும்
(2) விலை உயர்ந்தால் குறைவடையும்
(3) விலை உயர்ந்தால் மாறாது
(4) விலை குறைந்தால் அதிகரிக்கும்
(5) விலை மாற்றம் எவ்வாறாயினும் அதிகரிக்கும்

12) எப்போது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்பட ஆரம்பிக்கும்?
(1) மொத்த உற்பத்தி அதிகரிப்பதற்கு ஆரம்பிக்கும் போது
(2) மொத்த உற்பத்தி உச்சமடையும் போது
(3) எல்லை உற்பத்தி அதிகரிப்பதற்கு ஆரம்பிக்கும் போது
(4) மொத்த உற்பத்தி குறைவடையும் வேகத்தில் அதிகரிப்பதற்கு ஆரம்பிக்கும் போது
(5) மொத்த உற்பத்தி வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும் போது

13) பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
(1) TC இற்கும் TFC இற்கும் இடையிலான இடைவெளி TVC யினைக் கருதும்
(2) MC கோடு AVC, AC ஆகியவற்றின் இழிவுப் புள்ளிகளை ஊடறுக்கும்
(3) நீண்டகால சராசரிச் செலவுக்கோடு திட்டமிடல் வளைகோடு எனவும் அழைக்கப்படலாம்
(4) சராசரி மாறும் செலவென்பது (AVC) கூலியின் அளவினால் (W) சராசரி உற்பத்தியினை (AP) தலைகீழ்ப்படுத்தியதைப் பெருக்க வரும் விடைக்குச் சமனாகும்
(5) மொத்தப் பயனானது ஆரம்பத்தில் அதிகரித்துச் செல்லும் வேகத்தில் அதிகரித்துச் சென்று பின்பு குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்

14) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று சாதாரண இலாபத்திற்கும் மேலாக இலாபம் பெறுவது
(1) நிறுவனத்தின் எல்லைச் செலவும் எல்லை வருமானமும் சமனடையும் போது
(2) நிறுவனமொன்றின் சராசரிச் செலவிற்கும் மேலாக, எல்லைச் செலவு காணப்படும் போது
(3) சராசரிச் செலவும், சராசரி வருமானமும் சமநிலையில் இருக்கும் போது
(4) சராசரி மாறும் செலவிற்கு மேலாக சராசரிச் செலவு இருக்கம் போது
(5) சராசரி வருமானம் சராசரி மாறும் செலவிற்கு சமனாக இருக்கும் போது

15) குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் வெளியீடு அதிகரிக்கின்ற பொழுது பின்வருவனவற்றில் எது உண்மையாக இருக்க முடியாது?
(1) சராசரி மாறும் செலவு அதிகரிக்கும்
(2) சராசரி மொத்தச் செலவு அதிகரிக்கும்
(3) எல்லைச் செலவு அதிகரிக்கும்
(4) மொத்தச் செலவு அதிகரிக்கும்
(5) சராசரி நிலையான செலவு அதிகரிக்கும்

16) நிறைபோட்டி, தனியுரிமை, தனியுரிமைப்போட்டி ஆகிய சந்தையமைப்புக்களில் விலைக்குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி முறையே,
(1) முடிவிலி, நெகிழ்ச்சியுள்ளது, நெகிழ்ச்சியுள்ளது
(2) முடிவிலி, நெகிழ்ச்சியற்றது, பூச்சியம்
(3) நெகிழ்ச்சியுள்ளது, முடிவிலி, நெகிழ்ச்சியற்றது
(4) முடிவிலி, பூச்சியம், நெகிழ்ச்சியுள்ளது
(5) பூச்சியம், நெகிழ்ச்சியற்றது, நெகிழ்ச்சியுள்ளது

17) பின்வரும் செலவு வகைகளில் தேசிய கணக்கீட்டில் உள்ளடக்கப்படும் பெறுமதி எது?
(1) தேயிலைத் தொழிற்சாலையொன்று 100000 இற்குக் கொழுந்தைக் கொள்வனவு செய்தல்
(2) இரண்டாந்தரப் பங்குச் சந்தையில் 1000 பெறுமதியான கம்பனிப் பங்குகளை வாங்குதல்
(3) வங்கியிடமிருந்து அரசாங்கம் பெற்ற குறுங்காலக் கடனுக்கான வட்டிச் செலுத்தல்கள்
(4) தளபாட மலிவு விற்பனையில் 25000 ரூபா தளபாடங்கள் கொள்வனவு செய்தல்
(5) ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் பெற்ற மாதாந்த ஊதியக் கொடுப்பனவு

18) தேசிய வருமான மதிப்பீட்டில் பல் கணிப்பீட்டுத் தவறினைத் தோற்றுவிப்பவை யாவை?
A - பயன்தகு கொடுப்பனவுகள்
B - மாற்றல் பெறுவனவுகள்
C - அரசிடமிருந்தான வட்டி வருமானங்கள்
D - குத்தகை வருமானங்கள்
E - அரசவரி வருமானங்கள்
F - பயன்படுத்திய பொருட்கள் மீதான செலவு
(1) A, B, C, D மட்டும்
(2) B, C, E, F மட்டும்
(3) A, B, C, D, E, F ஆகிய அனைத்தும்
(4) D, E, F மட்டும்
(5) மேற்கூறிய எவையுமல்ல

19) பேரண்டப் பொருளியல் சமநிலை என்பதன் கருத்து என்ன?
(1) சேமிப்பு, முதலீட்டிற்குச் சமப்படுத்தல்
(2) மொத்தக்கேள்வி, மொத்த நிரம்பலிற்குச் சமப்படுத்தல்
(3) விலை உறுதிப்பாடு காணப்படுதல்
(4) சென்மதி நிலுவை உறுதிப்பாடு காணப்படுதல்
(5) பொருட்சந்தை, காரணிச்சந்தை, தளம்பலற்று இருத்தல்

20) குறித்த ஓர் நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தினை விட மொத்தத் தேசிய உற்பத்தி மீதான செலவு அதிகமாகக் காணப்படுவதற்குரிய காரணமாக அமையக்கூடியது
(1) வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்
(2) பெறுமானத் தேய்வு
(3) தேறிய மறைமுக வரிகள்
(4) வெளிநாட்டிற்கு அனுப்பிய தேறிய காரணி வருமானம்
(5) ஏற்றுமதியால் வர்த்தக மாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

## பகுதி - II

பகுதி ‘‘அ’’ விலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி ‘‘ஆ’’ விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி ‘‘அ’’

01)

(i) பூச்சிய அமையச் செலவு தோற்றமுறும் சந்தர்ப்பங்களை இனங்காண்க. (2 புள்ளி)

(ii) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் எவ்வாறு உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் விளக்கப்படும்? (3 புள்ளி)

(iii) பின்வருவன எவ்வாறு உற்பத்திச் சாத்திய வளையியை மாற்றியமைக்கும் என ஆராய்க. (நிலக்குத்தச்சில் புடவையும், கிடையச்சில் கோதுமையும் உற்பத்தி செய்யப்படுகின்றது)

(அ) புடவையின் வளம் முழுவதும் திறமையாக கோதுமையில் ஈடுபடுத்தப்படுகிறது. (3 புள்ளி)

(ஆ) தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டுள்ளனர். (3 புள்ளி)

(இ) இரு உற்பத்தியிலும் ஊழியரின் தேர்ச்சித் திறன் அதிகரித்துள்ளது. அத்துடன் வேலைவாய்ப்பிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (3 புள்ளி)

(ஈ) வேலையின்மையைக் குறைப்பதற்கான உபாயம் ஒன்று பொருளாதாரத்தில் ஓரளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (3 புள்ளி)

(உ) கோதுமை உற்பத்தியில் வரட்சி நிலவுதல் (3 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02)

(i) உற்பத்திக் காரணி என்றவகையில் நிலம், உழைப்பு, மூலதனம் என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளி)

(ii) ஒரு பொருளாதாரத்தின் ஊழியத்தின் மொத்த நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? (4 புள்ளி)

(iii) ஊழியத்தின் உற்பத்தித்திறன் என்பதனால் கருதப்படுவது யாது? இதனை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? (4 புள்ளி)

(iv) முதல், முதலீடு, சேமிப்பு என்பவற்றிற்கிடையிலான தொடர்புகளை விளக்குக. (4 புள்ளி)

(v) ஒரு நாட்டின் மூலதனவாக்கத்தின் முக்கியமான மூலங்கள் யாவை? (4 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03)

(i) விலைப் பொறிமுறை என்பதன் கருத்து யாது? (4 புள்ளி)

(ii) சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் பணிகள் யாவை? (4 புள்ளி)

(iii) திட்டமிடல் பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் யாவை? (4 புள்ளி)

(iv) சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவிய மத்திய திட்டமிடல் முறைமை முறிவடைந்தமைக்கு வழிவகுத்த காரணிகள் யாவை? (4 புள்ளி)

(v) கலப்புப் பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் யாவை? (4 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04) சிந்துவெளிகால சமய நிலைபற்றி ஆராய்க.

(i) குறித்த பண்டம் ஒன்றின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (4 புள்ளி)

(ii) குறிப்பிட்ட பண்டம் ஒன்று தொடர்பாக கேள்வித்தொகை மாற்றம், கேள்வி மாற்றம் இரண்டையும் வேறுபடுத்தி ஆராய்க. (4 புள்ளி)

(iii) புறநடைக் கேள்வி உருவாகும் சந்தர்ப்பங்களை இனங்காண்க. (4 புள்ளி)

(iv) வருமான விளைவு, பதிலீட்டு விளைவு, விலை விளைவு என்பவற்றை ஆராய்க. (4 புள்ளி)

(v) சாதாரண பண்டம், இழிவுப் பண்டம், கிபன் பண்டங்களை ஆய்வு செய்யும் போது அவற்றின் வருமான விளைவு, பதிலீட்டு விளைவு, விலை விளைவு எவ்வாறு அமையும் என்பதனை ஆராய்க. *(4 புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

## பகுதி "ஆ"

*05)*

(i) உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் என்பதை ஆராய்ந்து விளக்குக. இதன்பின் சந்தையில் மாற்றங்கள் எவ்வாறு அமையும்? *(5 புள்ளி)*

(ii) உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை எப்போதும் நுகர்வோனுக்கு நன்மை பயப்பதாக அமையும் எனக் கூறுவீரா? காரணம் தருக. *(5 புள்ளி)*

(iii) உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன வழியை மேற்கொள்ளலாம் ஆராய்க. *(5 புள்ளி)*

(iv) குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலையை விளக்கி அது தொடர்பான சந்தை மாற்றங்களையும் குறிப்பிடுக. *(5 புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*06)*

(i) உற்பத்திக் கோட்பாடு தொடர்பாக குறுங்காலம், நீண்டகாலம் இரண்டையும் வேறுபடுத்தி ஆராய்க. *(4 புள்ளி)*

(ii) குறைந்து செல்லம் எல்லை விளைவு விதி, அளவுத்திட்ட விளைவு விதி இரண்டையும் வேறுபடுத்தி ஆராய்க. *(4 புள்ளி)*

(iii) குறுஞ்கால, நீண்டகால உற்பத்திச் சார்புகளை வேறுபடுத்தி ஆராய்க. *(4 புள்ளி)*

(iv) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியின் வரையறைகளை முன்வைக்க. *(4 புள்ளி)*

(v) உற்பத்திக் கோட்பாடு தொடர்பாகக் குறுங்காலப் போக்கின் மூன்று கட்டங்களையும் படத்தில் தெளிவுபடுத்துக. *(4 புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*07)*

(i) நிறைபோட்டிச் சந்தையின் சிறப்பியல்புகள் யாவை? *(4 புள்ளி)*

(ii) நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்விக் கோட்டின் இயல்பு யாது? அதனை நிர்ணயித்த காரணிகள் யாவை? *(4 புள்ளி)*

(iii) நிறைபோட்டி நிறுவனத்தின் மூன்று விதமான குறுங்கால நிலைகளையும் படத்தில் தெளிவுபடுத்துக. *(4 புள்ளி)*

(iv) நீண்டகாலத்தில் ஏன் நிறைபோட்டி பூச்சிய சிக்கன இலாபத்தில் செயற்படுகின்றது? *(4 புள்ளி)*

(v) நிறைபோட்டி நிறுவனத்தின் நிரம்பல் வளையியை விளக்குக. *(4 புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*08)*

(i) தேசிய வருமானக் கணிப்பீடுகளின் உபயோகங்கள் யாவை? *(4 புள்ளி)*

(ii) எச்சந்தர்ப்பங்களில் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுச் செலவு, அந்நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்க பெரிதாக இருக்கும்? *(4 புள்ளி)*

(iii) உள்ளாந்த மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி என்பதனால் கருதப்படுவது யாது? இதன் உபயோகம் யாது? *(4 புள்ளி)*

(iv) ஒரு நாட்டின் வர்த்தக மாற்றுவீதம் அந்நாட்டின் தேசிய வருமானத்தை எவ்வாறு பாதிக்கின்றது? *(4 புள்ளி)*

(v) தேசிய வருமானத்தை கணிப்பிடும் முறைகளில் எதர்நோக்கப்படும் பிரச்சனைகள் யாவை? *(4 புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*